Wednesday, 17 December 2014

# மருத்துவமனை மேலாண்மை படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

**சென்னை "சங்கர நேத்ராலயா அகாதெமி நடத்தும் மருத்துவமனை சான்றிதழ் சார்ந்த படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**இந்த வகுப்புகள் கல்லூரி சாலையில் உள்ள சங்கர நேத்ராலயா அகாதெமியில் நடைபெறும்.**

**மருத்துவமனைகள், மருத்துவம் சார்ந்த நிறுவனங்களில் நிர்வாகம், மேலாண்மைத் துறைகளில் பணியாற்றும் இளநிலை, மத்திய நிலை ஊழியர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு 12 வார இறுதி நாள்கள் (சனி, ஞாயிறு) பயிற்சிக் காலமாக மேற்கொள்ளப்பட்டு பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை பயிற்சிகள் வழங்கப்படும்.**

**இதில் பயிற்சி பெறும் மாணவர்கள் தங்களது தலைமைப் பண்பு, குழு மனப்பாங்கினை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்றும், அண்மையில் மேம்படுத்தப்பட்ட மேலாண்மை உத்திகள் இந்தப் பயிற்சி வகுப்புகளின் மூலமாக கற்பிக்கப்படும் என சங்கர நேத்ராலயா அகாதெமியின் பேராசிரியர்கள் தெரிவித்தனர்.**

**இந்தப் படிப்பில் சேர விருப்பமுள்ளவர்கள் கல்லூரி சாலையில் உள்ள சங்கர நேத்ராலயா அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.**

**இது குறித்து மேலும் தகவல்கள் பெற அகாதெமியின் அதிகாரி அ.மகாலிங்கத்தை 97104 85295, 98405 23560 ஆகிய கைப்பேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.**

http://www.dinamani.com/tamilnadu/2014/12/17/மருத்துவமனை-மேலாண்மை-படிப்/article2575176.ece